அரசாங்கம் இந்த ஆண்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா? அந்த 600 பேர்களுக்கும் கொடுப்பதற்கு அரசாங்கம் மறு பரிசீலனை செய்து முடிப்பதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: நிச்சயமாக பரிசீலிக்கும்.

பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்கு குமுளியில் பணிமனை கட்டும் திட்டம்

*வினா எண். 1078. திரு. ஆர். டி. கோபாலன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமுளியில் பாண்டியன் போக்குவரத்துக் கழக பேருந்துகள் நிற்பதற்கு டிப்போ கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:

பாண்டியன் சாலைப் போக்குவரத்து கழகத்திற்குச் சொந்தமான பணிமனை ஒன்று ஏற்கெனவே குமுளியில் உள்ளது. அங்கு ஒரு பேருந்து நிலையம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஒன்று மேற்படி கழகத்தின் பரிசீலனையிலுள்ளது.

திரு. ஆர். டி. கோபாலன்: அங்கே பல்லவன் டிப்போ முதலில் இருந்தது. அதை இப்பொழுது பாண்டியன் போக்குவரத்துக் கழகம் எடுத்துள்ளது. ஆனால் அங்கே பேருந்துகள் நிற்பதற்கு வேண்டிய வசதிகள் இல்லை. ஆகவே அந்தப் பேருந்துகள் நிற்பதற்கு வேண்டிய வசதிகள், ஏற்பாடுகள் செய்து கொடுக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். பாண்டியன் போக்குவரத்துக் கழகம் சார்பாக அங்கே ஒரு பணிமனை இருக்கிறது. அதில் 11 பேருந்துகள் இப்போது நிற்கின்றன. ஆனால் பயணிகளை ஏற்றுவதற்காக நிறுத்தப்படுகிற பஸ்கள்—பஸ் ஸ்டாண்ட் இல்லை என்ற காரணத்தால் இப்போது பாண்டியன் போக்குவரத்துக் கழகம் அதற்காக பணத்தை ஒதுக்கி ஏறக்குறைய ஐந்து ஏக்கர் நிலம் அதற்கு தேவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கேட்டிருக்கிறது.

அரசுப் பேருந்துகளில் அதிகப் பயணிகளை ஏற்றிச் செல்லுவதை தடுக்கும் திட்டம்

வினா எண். 1015—திரு. த. வேணுகோபால்: மற்றும் திரு. இரா. தமன்ரக்கனி:— மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—